தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# கனவு பற்றி திருக்குறளில்: ஓர் மூளை நரம்பியல் ஆய்வு

## On Dreams in the Tirukkural: A Neuroscientific Study

**பேரா. டாக்டர். எம். ஏ. அலீம் எம். டி. டி. எம் (நியூரோ)**
**மூளைநரம்பியல் துறை பேராசிரியர், தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவக்கல்லூரி, சிறுவாச்சூர்**
**மூளை நரம்பியல் துறை நிபுணர், ஏ பி சி மருத்துவமனை, திருச்சி**

**Prof. Dr. M. A. Aleem**
Professor of Neurology Dhanalakshmi Srinivasan Medical College Siruvathur,
Consultant Neurologist ABC Hospital Trichy
Email: drmaaleem@hotmail.com ORCID: https://orcid.org/0000-0002-4556-8826

**Abstract:** Dreams demonstrate that our brain can automatically generate and allow us to perceive events based on our conscious experiences. It is surprising that Valluvar spoke about dreams – including how they relate to brain functions based on conscious experiences during sleep, why the dreamer is often detached from their environment, and whether dreaming is closely related to mental imagination and ideas – at a time when neuroscientific facts were still unknown. It is not only surprising that Valluvar discussed dreams when neuroscientific facts were yet unknown, but it is also astonishing that he specifically dedicated Chapter 122 to the topic, titled 'Kanavunilaiyuraiththal' (The Nature of Dreams). Furthermore, besides these, he has also mentioned dreams in the Porutpal (Book on Wealth/Politics) in chapters such as 'Thee Natpu' (Evil Friendship - 819) and 'Iravu' (Begging - 1054). Current neuroscientific studies have confirmed the phenomena Valluvar described, such as the appearance of a lover in dreams, finding pleasures in dreams that are not obtainable in wakefulness, and the connections between dreams and waking life.

Keywords: Thirukkural, Valluvar, Dreams, Neuroscientific Study, Neurology

***சுருக்கம்:***

நமது மூளை, நம் நினவான அனுபவங்களின் மூலம் நிகழ்வுகளை தானாகவே உருவாக்கி நம்மால் காண முடியும் என்பதை கனவுகள் காட்டுகின்றன. தூக்கத்தில் நினவான அனுபவங்கள் அடிப்படையில், மூளை செயல்பாடுகளுடன் எவ்வாறு அவை தொடர்புடையவை என்பது பற்றியும், கனவு காண்பவர் ஏன் சுற்றுச்சூழலிருந்து, பெரும்பாலும் தூக்கத்தில் விடுபட்டிருப்பது, பற்றியும் மேலும் கனவு காண்பது மன கற்பனையுடனும் கருத்துக்களுடனும் மிகவும் தொடர்புடையதா? என்பது பற்றியும் வள்ளுவர் கனவு பற்றி மூளைநரம்பியல் அறிவியல் உண்மைகள் அறியப்படாத அன்றே கூறியிருப்பது வியப்பான ஒன்றாகும். வள்ளுவன் கனவு பற்றி மூளைநரம்பியல் அறிவியல் உண்மைகள் அறியப்படாத அன்றே கூறி இருப்பது மட்டுமல்லாமல், அதற்காக அதிகாரம் 122 கனவுநிலை யுரைத்தல் என்னும் தலைப்பில் கூறி இருப்பது விந்தையாகும். மேலும், இவை தவிர கனவுபற்றி பொருட்பாலில் தீ நட்பு (819), இரவு (1054) என்னும் அதிகாரங்களிலும் கூறியிருக்கின்றார். கனவில், காதலன் தோன்றுவது, நினைவில் கிடைக்காத இன்பம் கனவில் கிடைப்பது, கனவுக்கும் நனவுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி வள்ளுவர் கூறியதை இப்போதைய மூளை நரம்பியல் ஆய்வுகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

### ***முன்னுரை:***

நமது மூளை, நம் நினவான அனுபவங்களின் மூலம் நிகழ்வுகளை தானாகவே உருவாக்கி நம்மால் காண முடியும் என்பதை கனவுகள் காட்டுகின்றன.

தூக்கத்தில் நினவான அனுபவங்கள் அடிப்படையில், மூளை செயல்பாடுகளுடன் எவ்வாறு அவை தொடர்புடையவை என்பது பற்றியும், கனவு காண்பவர் ஏன் சுற்றுச்சூழலிருந்து, பெரும்பாலும் தூக்கத்தில் விடுபட்டிருப்பது, பற்றியும் மேலும் கனவு காண்பது மன கற்பனையுடனும் கருத்துக்களுடனும் மிகவும் தொடர்புடையதா? என்பது பற்றியும் வள்ளுவர் கனவு பற்றி மூளைநரம்பியல் அறிவியல் உண்மைகள் அறியப்படாத அன்றே கூறியிருப்பது வியப்பான ஒன்றாகும். வள்ளுவன் கனவு பற்றி மூளைநரம்பியல் அறிவியல் உண்மைகள் அறியப்படாத அன்றே கூறி இருப்பது மட்டுமல்லாமல், அதற்காக

அதிகாரம் 122 கனவுநிலை யுரைத்தல் என்னும் தலைப்பில் கூறி இருப்பது விந்தையாகும். மேலும், இவை தவிர கனவுபற்றி பொருட்பாலில் தீ நட்பு (819), இரவு (1054) என்னும் அதிகாரங்களிலும் கூறியிருக்கின்றார்.

கனவில், காதலன் தோன்றுவது, நினைவில் கிடைக்காத இன்பம் கனவில் கிடைப்பது, கனவுக்கும் நனவுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி வள்ளுவர் கூறியதை இப்போதைய மூளை நரம்பியல் ஆய்வுகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

மூளை இயக்கத்தின் ஒருவித அதிர்வுகள் காரணமாக மூளையில் பதிந்துள்ள நினைவுக்குறிப்புகள் ஒன்றோடு ஒன்று தொடர்புப்படுத்தும் செயல்பாட்டின் விளைவாக கனவுகள் ஏற்படுகின்றன.

பெரும்பாலும் தூக்கத்தில், அதிக கண்ணசைவுகள் உள்ள உறக்கத்தில் Rapid Eye Movement Sleep (REM Sleep) மூளையின் லிம்பிக் (Limbic System) பகுதி மற்றும், பிரான்டல் பகுதி (Frontal Lobe) பாதிப்புகள் இன்றி இருக்கும் போது (Vivid) தெளிவான, மற்றும் வினோதமான (Bizarve) கனவுகள் ஏற்படுகின்றன. இதற்கு காரணம், உணர்ச்சிவசப்படக்கூடியதை (Emotional) கட்டுப்படுத்தும் மூளை மையமான மூளையின் லிம்பிக் பகுதி கண் அசைவு அதிகம் கொண்ட தூக்கத்தில் அதிகமாக இயங்குவதே ஆகும். இதனால் உணர்ச்சி மிகு கனவுகள், கிளர்ச்சி மிகு கனவுகள் உண்டாகின்றன. நம் மூளையின் பிரான்டல் பகுதி கண் அசைவுகள் அதிகமுள்ள தூக்கத்தில் சற்றுக் குறைவான இயக்கம் கொண்டுள்ளதால் நாம் வைத்துள்ள ஞாபகங்கள் மற்றும் அனுபவங்கள் அடிப்படையில் கனவுகள் கோர்வையாக கதை போன்று எழுகின்றன.

மேலும் பான்ஸ் (Pons) என்னும் மூளை தண்டு பகுதியில் ஒரு மையம் நம் கண் அசைவு உள்ள தூக்கம் ஆரம்பிப்பதில் முக்கிய பங்குள்ளதன் காரணமாக, நம் மூளையின் பார்வையை உணரும் மூளை பகுதியில் (Visual Cortex) இயக்க அதிகரிப்பு ஏற்படுவதால் காட்சி பிம்பங்கள் படம்போல் கனவுகளில் ஏற்படுகின்றது. இதற்கு காரணம் பான்டோ செனிகுலோ அக்ஸிபிட்டல் (Ponto - Geniculo - Occipital) இணைப்பில் அதிக அதிர்வலைகள் ஏற்படுவதே ஆகும். இதுவே நம் கண் அசைவு தூக்கம், உறக்கத்தில் ஆரம்பமாகவும், காட்சிகள், உருவங்கள், கொண்ட கனவுகள் படம் போல் ஓடவும் காரணமாகின்றது. இது மட்டுமின்றி நமது மூளையின் அமைக்தலா (Amygdala), ஹிப்போகாம்பஸ் (Hipocampus) போன்ற பகுதியில், உணர்ச்சி வசமாகக் கூடிய மற்றும் ஞாபகங்கள் தொடர்புடனான கனவுகள் வடிவு பெற காரணமாகவும் உதவுகின்றன. இத்துடன் தலாமஸ் (Thalamus), மீடியன் பிரிபிரண்டல் பகுதி (Medical Preprontal Cortex) மற்றும் சிங்குலேட் பகுதியின் பின் பகுதி (Posterior Cinculate Cortex) போன்ற மூளை பகுதியின் இயல்புநிலை இயக்கங்களும் தூக்கத்தில் அதிகமாக இயங்குவதும் பல்வேறு கனவுகளுக்கு காரணமாக அமைகின்றன.

கண் அசைவு தூக்கத்தில், கோலினர்சிக் (Cholinergic) என்னும் நரம்பு இயக்கி வேதியல் பொருள் உள்ள ஆ இ எம் ஆன் (REM ON) என்னும் நரம்பிழைகளும், மோனாஅமினர்ச்சிக் ஆ இ எம் ஆப் (REM OFF) நரம்பிழைகளும் மூளையின் பான்ஸ் (Pontine Tegmaterin) பகுதியில் தங்களின் வேதியல் நரம்பியல் கடத்திகளின் இயக்கத்தை அளவீடு செய்து இயக்கி, கனவுகளுக்கு அடித்தளம் அமைக்கின்றன.

தூக்கத்தின் இன்னொரு நிலையான கண் அசைவு அற்ற தூக்கத்திலும் Non Rapid Eye Movement Sleep (NREM Sleep) கனவுகள் ஏற்படலாம் என தற்போதைய ஆய்வுகள்

கூறுகின்றன. மேலும் விலங்குகளும் கனவு காணக்கூடும் எனவும் அறியப்பட்டுள்ளது. ( நற்றிணை 87 வௌவால் கனவு)

இத்தகைய கனவு பற்றிய மூளை நரம்பியல் அறிவியல் அடிப்படை உண்மைகளை வள்ளுவர் பன்னிரண்டு திருக்குறள்களில் இயம்பி இருப்பது மூளைநரம்பியல் அறிவியல் மருத்துவ கண்டுபிடிப்புகளுக்கு வள்ளுவனே மூலம் என்பதை காட்டுகின்றது.

காமத்துப்பாலில், கனவுநிலை யுரைத்தல் அதிகாரத்தில் கனவில் காதலர் தோன்றுவது, நனவில் கிடைக்காத இன்பத்தை கனவில் தருவது, கனவுக்கும் நனவுக்கும் உள்ள தொடர்புகள், நனவில் கிடைக்காததை கனவில் பெறுதல், கனவு நனவு போல இனிமை தருதல், போன்ற மூளைநரம்பியல் அறிவியல் அடிப்படையுடன் கூடிய உண்மைகளை திருக்குறள் கூறுகின்றது.

குறள் : 1211

" காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து "

காதலனை பிரிந்து வாடிய காதலி அயர்ந்து கண்ணுறங்கிய போது காதலன் அனுப்பிய தூதுவோடு வந்த கனவுக்கு நான் எதை விருந்தாக படைப்பேன் என்பது பொருள்.

இந்த குறலில் வாடிய காதலியின் அயர்ந்த உறக்கம் அவளின் கண் அசைவு உள்ள தூக்கத்தை குறிப்பதாக இருக்கின்றது. (ஆழ்ந்த உறக்கம் கண் அசைவு இல்லா தூக்கமாகும்) வள்ளுவன் அப்போதே கண் அசைவுள்ள தூக்கத்தில் கனவு வருவதை1 தெளிவுபடுத்தி இருக்கின்றார். மேலும் இக்கனவில் காதலன் தூதுடன் வரும் காட்சி படமாக்கப்பட்டிருப்பதை கூறுவதாக அமைத்திருக்கின்றது.

குறள் : 1212

" கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன் "

தூக்கம், கண் அசைவு இல்லா தூக்கம், கண் அசைவு உள்ள தூக்கம் என இரு வகைப்படும். முதலில் கண் அசைவுகள் இல்லாத தூக்கம் ஆரம்பித்து லேசான தூக்கத்தில் தொடங்கி, நான்கு நிலைகளில் உறக்க நிலையை அடைந்து, அடுத்து கண்ணசைவு உள்ள தூக்கம் ஏற்படுகின்றது. இதில் கனவுகள் அதிகம் ஏற்படுகின்றது. இவ்வாறு இவை இரண்டு தூக்க நிலையும் 90 - 120 நிமிடங்களுக்கு ஒரு முறை மாறி மாறி ஏற்படுகின்றன. இது போன்று ஒரு இரவில் 4 – 6 முறை இவ்வகை தூக்க வட்டம் நடைபெறுகின்றது. கண் விழிக்கின்ற அதிகாலை நேரம் நெருங்க நெருங்க கண் அசைவு தூக்கம் அதிக நேரம் இருக்கக்கூடியதாக இருக்கின்றது.

இக்ககுறளில் காதலி நினைக்கின்றாள், தான் விரும்பும்போது என் கண்கள் தூங்குமானால் அப்போது என் கனவில் வரும் காதலனுக்கு நான் தப்பி பிழைத்திருப்பதை சொல்வேன் என்பதாகும். இக்குறலில் தான் வேண்டும்போது தூங்குமானால் என வள்ளுவர் கூறியிருப்பது தூங்க ஆரம்பிக்கும் போது, முதல் நிலைகளாக உள்ள கண் அசைவற்ற தூக்க நிலையை குறிப்பிடுகிறார். கண் அசைவற்ற தூக்க நிலையிலும் கனவு வரும் 2 என்ற

தற்போதைய மூளை நரம்பியல் கனவு பற்றிய ஆய்வை வள்ளுவன் கோடிட்டு அப்போதே காட்டி இருக்கிறார்.

எப்போதும் கண் அசைவற்ற தூக்கத்தில் தங்களின் கடந்த கால எண்ணங்கள், நினைவுகள் தொடர்பான கனவுகள், (More Abstruct) சுருக்கமானதாக தொடர்ச்சியாக இல்லாமல் (Less Narrative) மீண்டும் நினைவு கூற தக்கதாக உணரப்படும். இதை வெள்ளை கனவு என கூறுவர். (White Dream) ஏனெனில் இக் கனவில் கனவு அனுபவத்தை உணர்ந்து மீண்டும் நினைவுபடுத்த (Recall) முடியும். இத்தகைய தன்மையையே வள்ளுவர் குறள் 1212 ல் கூறியிருக்கின்றார்.

குறள் : 1213
" நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர் "

தன் நேரில் (நனவில்) வந்து கண்டு அன்பு பாராட்ட காதலனை அவள் அனுதினமும் நினைத்துக் கொண்டே இருப்பது, அவளின் மூளையின் ஞாபக பதிவு பகுதியில் பதிந்து விட்ட நிலையில், அவனை அவள் எண்ணிக் கொண்டே தூங்கச் செல்வதால் அவன், அவளின் கனவில் தோன்றி மகிழ்வதாக இக்குறள் கனவில், மூளையின் முக்கிய பங்கை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

இது தவிர
குறள் 819
கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

பொருட்பாலில் தீ நட்பு அதிகாரத்தில் கனவிலும் என தொடக்கச் சொல்லாக வள்ளுவர் குறள் 819 ல், தம் செயலும், சொல்லும் வேறாக இருப்பவர்கள் பற்றி நல் ஒழுக்கம் உள்ளவர்கள் அவர்கள் செயல்பற்றி நனவில் மட்டும் அல்லாமல் கனவிலும் அவர்கள் பற்றி பார்த்தது துன்பமானதாகின்றது என்பது பொருள்.

ஒருவர் ஆழ்மனதில் தாங்கிக் கொள்ள முடியாத நிகழ்வுகள் மூளையில் ஆழமாக ஞாபக மூளைபகுதியில் பதிவாகின்றதால் அந்த நிகழ்ச்சி தொடர்பானவை கனவுகளில் தோன்றி துன்பப்பட வைக்கின்றன என்ற மூளைநரம்பியல் கனவு பற்றிய தற்போதைய கண்டுபிடிப்பை அப்போதே வள்ளுவர் கோடிட்டு காட்டி இருக்கின்றார்.

குறள் 1054
இரத்தலும் ஈதலே போலும் கரத்தில்
கனவிலும் தேற்றாதார் மாட்டு

தன்னிடம் உள்ள செல்வங்களை கனவில் கூட மறைத்து வாழத் தெரியாதவரிடம் ஒரு வறியவர் இரந்து கேட்பதும் ஈதலைப் போலவே சிறந்ததாகும். நம் எண்ணங்கள், செயல்கள் யாவும் கனவில் ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும் ஒரு ஈகை குணம் கொண்ட ஒருவனின் கனவில்

அவன் பெற்ற செல்வங்களை மறைத்து வைப்பது போன்று கனவில் கூட காணத நல் உள்ளம் கொண்டவரிடம் யாசகம் கேட்பது ஈகை போன்றது என கனவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறிவியல் அடிப்படையில் வள்ளுவர் இக்குறளின் குறிப்பிடுகின்றார்.

திருக்குறளில் அதிகாரம் 122 ல் நனவினால் என்னும் வார்த்தை மட்டும் தொடக்கச் சொல்லாக ஐந்து முறை வருகின்றது. இது போன்று ஆற்றின, இன்பம் என்னும் சொற்களும் ஐந்து முறை வருகின்றது குறிப்பிடத்தக்கது. இது போன்று கனவினுக்கு (1211), கனவினார் (1213), கனவினால் (1214) கனவுந்தான் (1215) கனவினாற் (1216), கனவினான் (1217), கனவினாற் (1219), கனவினாற் (1220) என கனவுக்கு அதிகாரம் கொடுத்ததுடன் கனவு பற்றிய கருத்துணர்வுக்கு 10 குறள்கள் தந்ததுடன், கனவு தொடர்பான வார்த்தைகள் 8 இடங்களிலும் பொருட்பாலில் கனவினும் (819) என கனவு பற்றி தொடக்கச் சொல்லாக தீ நட்பு அதிகாரத்திலும், இரவு அதிகாரத்தில் (1054) கனவினும் என இருமுறை வள்ளுவர் பயன்படுத்தி இருப்பது கனவு பற்றி சங்ககால இலக்கிய நூல்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளதை, நாம் வள்ளுவன் வழியாக மூளை நரம்பியல் அறிவியல் அடிப்படை உண்மைகளோடு உணர முடிகின்றது.

## References:


1. Purues D, Augustine GJ, Fitzpetrick, etal, Editors, Neruoscience 2nd edition. Sounder Land CMA : Sinauer Associates ; 2001. The possible functious of REM sleep and Dreams.

2. Martin JM, Andriano DW, Mota NB, etal ; Structural difference between REM and Non-REM

3. dream reports assessed by graph analytics. PLOS one.2020 JW 23;15 (7).



**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.